# 25. சருவபூரணசயம்பு.

*பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**த**ரணி தன்னிலருள் பெற்று ஞானகதி சாரு யிர்க்குரிய யாக்கையாச்
சாற்று பொம்மையி லுயர்ந்த சுத்தசிவ தத்து வக்கயிறு கட்டியுன்
புரண சத்திநனி யாட்டு விக்குமிது புறம தத்தவர்க ளுணர்விலே
பொருள்ப டுந்தகைமை யாவதோ வொருவர் புகலி னுஞ்செவியு ணுழையுமோ
கரண நந்தலி லிருந்து சுத்தசிவ கரண முற்றவர்க ளறிவரென்
கவலை யத்தனையு நூறி முத்தியருள் காட்டு நல்லகிரு பாளுவே
சரண மென்பவரை யாத ரித்தருள்செய் சாமி யென்பர்குரு சாமியே
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 1

**மே**தை கூறுமுப நிடதம் யாவையினு மேல தாமதர்வ சிகையெனா
மிழற்ற வுள்ளவொரு சுருதி யானதயன் விண்டு ருத்திரர் வலாரியா
ஓதெ லாருமிங னுற்ப விக்கிறவ ரொண்மை யிந்திரிய முழுமையும்
ஓங்கு பூதமொடு தோன்று கின்றன வுரத்த காரணமு மதனையே
வாதை யேதுமிலி யாய்ப்ப டைத்தவனு மல்க வெண்ணுநனு முளனவன்
வழுவு றுஞ்சனன முறுவ தின்றெென வழுத்து மக்கடவு ணீயரோ
தாதை யேயுனை விடுத்த மார்க்கிகளுஞ் சாம வேதமுடி வடைவரோ
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 2

**மூ**ன்று மூர்த்திகளு ளொருவ னென்றுமொழி யுளவு ருத்திரனுக் குள்ளுளே
முக்கிய சத்துவமும் வெளியி லேதமசு முண்ட கக்கணனுக் குள்ளுளே
ஊன்று தாமசமும் வெளியிற் சத்துவமு மோதி மப்பறவை யூருவோற்
குபய பக்கமு மிராச சத்திறனு முண்டெ னத்தெளி வுரைத்திடும்

---

1. **சயம்பு** = சுயம்பு ; ஸ்வயம்பூ - வடசொல்.

3. **மொழியுள** – / மொழியவுள்ள என்பதன் சிதைவு.

“சத்துவமும் வெளியிலேதமசும்” என்னுங் குணங்குறித்துத் “தோலுயர்

ஆன்ற சைவமுறை ஞான சங்கிதையி னணிசி றந்துறு மிரண்டினும்
அரிய காந்தமுறு சூத சங்கிதையி னறைத ரும்பரவிஞ் ஞானநேர்
தான்றெ ரிக்கிடனு மோது மித்தையுணர் தரமி லார்திரிபு சொல்வரே
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 3

**மா**ம யக்கிருளில் சுத்த மாயைதனை வடிவு கொண்டதிரு மேனியாய்
மருவி நின்றரிய வாக மத்தறையு மாறு முக்கரண வழியிலே
காம முற்றவினை யுயிர்கள் கண்ணில்விளை கரும முள்ளபடி யிருவினைக்
கதியை யவ்வுயிர் களுக்கி குத்தினிய கருணை கூர்ந்துபத முத்தியை
ஈமி டற்கடவு ளெனுமு ருத்திரனை யிணையி றன்னுடைய வாணையில்
என்றும் வைத்துமுத லாயி ருக்குமுனை யீர மற்றமத மார்க்கிகள்
தாம தித்துநனி யுய்வ ரோவெனொரு தஞ்ச மானகுக தெய்வமே
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 4

**சா**ர்பி ழந்தமிடி யாது லர்க்குரிய சாலை யாதிநிமிர் கன்னிகா
தான வந்தமுள வெட்டொ டெட்டில்விரி தரும மென்றபசு புண்ணியத்
தேர்பி னின்றுமர னால யப்பணிநொவ் வென்ப தைக்கடியு மூர்த்திமேல்
இடுக யிங்கரிய மாதி பல்வகை யியம்பு நல்லசிவ புணியமே

---

தைத்திரியம்" என்றற்றொடக்கத்து 83 - ஆம் பத்து இனிது விளக்கும்; **சைவசமய சரபமு நன்கு போதிக்கும்.** தமசு = இருள்; இது, திமிரமெனவும்படும். இத்தன்மைத்தே தாமசகுண மென்பது "திமிராந்தம் தாமஸமிதி" என்னுஞ் **சாரீரகோபநிஷத்** வாக்கியத் தறியக்கிடக்கின்றது.
**சைவமுறை** = சைவபுராணம். **தெரிக்கிடனும்** - தெரிக்குமிடனும் என்பதன் சிதைவு.

4. **வடிவு** = வண்ணம். சுத்தமாயைதனை வடிவுகொண்ட திருமேனியாய் மருவி நிற்பவன், மூவருளொருவனாக இங்குக் கூறப்பட்ட வுருத்திரனையுந் தன தாணைவழி நடாத்துந் தலைமைக்கடவுளாங் குகனேயென்க; "முதலாயிருக்கு முனை" "குகதெய்வமே" என்பன கருதுக. சுத்த மாயை திருமேனி யென்பது இனிது நாட்டப்பட்டிருத்தல் - "தூர்த்தகுண முள்ள விபசாரிநடை" என்றற்றொடக்கத்துக் கடவுள் வணக்கத்துத் திருப்பாட்டுரை படித்துணர்க.

5. **ஏர்பு** = எழுச்சி. "மூர்த்திமேலிடு கயிங்கரியமாதி பல்வகை" என்றமையின், சிவனடியார்க்குச் செய்யும் பணிகளும் பதிபுண்ணியமென இங்குக் கொளக்கிடக்கின்றன. இப்பதிபுண்ணியம், பசுபுண்ணியத்தினும் பய னான் மேம்பட்டதாகலின் அது "சீர்சிறந்த வியன்" எனப்பட்டது. இவ் வகையினை யிக்காலத்து மாந்தருட் சிலர், பலர் உணராது பசு புண்ணியமே விரும்புகின்றனர். பதிபுண்ணியஞ் சிவபுண்ணிய மெனப் பட்டது.

சீர்சி றந்தவிய னென்மர் கற்றவர்கள் செப்ப வந்தவிரு புணியமுஞ்
செய்யு நல்லவர்க ளுள்ளு ணர்ந்துரிமை சேரு மாறுபுரி யெந்தைநின்
சார்பெ னக்கனிய மாயி னுய்யும்வகை தரணி மேலுமுள தோசொலாய்
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 5

**ஆ**சை கொண்டுபய புண்ணி யங்களை யயர்ந்த வர்க்கரிய சொர்க்கமும்
ஆச கன்றெழு நிராசை கொண்டவை யயர்ந்த வர்க்கரிய ஞானமே
பேசு கின்றவருண் மேனி கொண்டெழு பிரானை யுங்கருணை சாலுமப்
பிரானின் முன்னிலையில் வீடு மீயுமொரு பெரிய தெய்வமெனு மெந்தைநீ
மாசு கொண்டதமி யேன ரந்தைவலி மாற்றி நல்லருள் கொடாவிடின்
மனமு ணிற்குநசை யெந்த வாறகலு மறுபி றப்பினை யெணுந்தொறுந்
தாச னெஞ்சது கலங்கு கின்றதரு டந்த ணைப்பது புரிந்திடாய்
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 6

**வ**ருண மெச்சுந லொழுக்க முண்மையெனும் வாய்மை யெவ்வுயி ரிடத்தினும்
வைக்கு நற்கிருபை யாக மஞ்சுருதி வழியி னிற்குநடை யுன்கணே
கருது மன்புணர் வொருங்கு பட்டுநிமிர் காசில் சீலம்விர தாதிசேர்
கரும மாயதவ நல்லொ முக்குடையர் கண்டு நல்குமுயர் தானமெப்
பொருளி னும்பிரிய வீன மென்னுமொரு புரையு மற்றதுற வென்பன
பூமி யின்கணுடை யுத்த மர்க்குரிய பொருளை யீயுமருள் வள்ளலே
தரும மேதுமறி யாத வெற்குனது தஞ்ச மன்றிவழி யுள்ளதோ
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 7

**கு**லந்த வந்திரு மிகுந்த கல்விகள் குறித்தெ ழும்பல செருக்கினைக்
கொல்ல டக்கமு முயர்ந்த வர்க்கினிமை கொள்ளு நட்புமுப சாரமும்
அலங்கல் பொய்த்தபெரி யார்த்தொ ழுந்தெருளு மந்த மாகநுதி செய்தலும்
அன்பு வந்தனை செயற்கு ரித்துளரை யஞ்ச லித்தலுமெய் யாகமஞ்
சொலுந்து றைப்படி யுனைப்ப ழிச்சியொரு சோர்வ றத்தொழுத லாற்றலுஞ்
சொந்த மாகவுறு முத்த மர்க்குரிய சுபம ளித்தருளும் வள்ளலே
சலஞ்சி காதமன முடைய வெற்குனது தஞ்ச மன்றிவழி யுள்ளதோ
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 8

8. **அலங்கல்** = அசைவு.

ஏத மற்றமுறை பன்னு தாவரம தென்னு மூர்த்தியொடு சங்கமம்
என்ற தாசரையு மஞ்ச லித்துநய னேற்க வேண்டுமென லுஞ்சிவத்
தாத ரச்சுகுண தாச ரைச்சிறிது மவம திக்கிலஙன் மூர்த்தியின்
அதிவ ணக்கமும் வியர்த்த மாமெனலு மாக மச்சமத மாகலின்
தோத கக்கழு தகந்தை தாமினிய தொண்டர் நம்மினுய ராரெனச்
சூழி னேத்துபர மூர்த்தி யுந்தொகு துருக்க வன்கலென வாமெனாச்
சாத முற்றவ ருணர்ந்து கொள்வரிது தாவு ளோர்மனசி லேறுமோ
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 9

இதய மென்றவிட னாத்து மாவையரு ளிறைவ னூன்மெயுரை கொண்டறா
திகலு மாயையி னுபாதி போக்கியெவ ரேச றத்தெரிந ரோவவர்க்
குதய மாகுமதி யின்ப மென்றுகரு துரைசெய் தார்களது சங்கையில்
உறுதி யென்றுபல சீடரும்பொரு ளுரைத்த வாவுமதர் நின்றனர்
முதியர் மெச்சுமொரு நீல கண்டர்நனி முன்னு மவ்விதய வெளியிலே
முதல ருட்சிவனை யறித லின்பென மொழிந்து நின்றனரிம் மாணெறி
சதத முந்தமிய னுறவெ ணாயருண சயில நாதர்பிர மணியமே
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. 10